7th March 1969]

கேப்பையை லாரி எண். எம். டி. ஆர். 2995 மூலம் தேனீயிலிருந்து மதுரை நகருக்கு 21—4—1966-ம் தேதி அனுமதி இல்லாமல் கொண்டு சென்றார். 21—4—1966-ம் நாளன்று பெரியகுளம் வட்டமும் மதுரை வட்டமும் புஞ்சை தானியங்கள் போக்குவரத்து தடை செய்யப்பட்ட தனித்தனி பகுதிகளாகும். எனவே திரு. குருநாதன் பேரில் வழக்கு தொடரப்பட்டது.

திரு. என். ஆர். தியாகராஜன்: தலைவர் அவர்களே, இது அன்றைய நிலை மட்டுமல்ல. இன்றைக்குக் கூட தேனீயிலுள்ள கிராம விவசாயிகள் தங்களுடைய புஞ்சை தானியங்களைச் சுற்றுப் புறங்களிலும் மதுரையிலும் விற்க முடியாத நிலை தொடர்ந்து இருக்கிறது. விவசாயிகள் தங்களிடம் உள்ள சொந்தத் தானியங் களை, கட்டுப்பாட்டில் வராதவைகளை எங்கேயும் விற்பதற்குத் தடையில்லை என்று அறிவித்து, உத்தியோகஸ்தர்கள் விவசாயி களுக்குத் தொந்தரவு கொடுக்க வேண்டாமென்று உத்தர விடுவார்களா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: தடையில்லாத பகுதி யில் கொண்டு போவதற்குத் தடையில்லை.

Post of Director of Health Services

*149. *Q.*—THIRU N. R. THIAGARAJAN: Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state—

(*a*) whether the post of the Director of Health Services has been converted into the post of Additional Director of Health Services; and

(*b*) the reasons therefor?

சுகாதார இலாகா இயக்குனர் பதவி

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு சுகாதார-அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) சுகாதார இலாகா இயக்குனர் பதவி இணை இயக்குனர் (Additional Director) பதவியாக்கப்பட்டதா ?

(இ) இதற்குக் காரணமென்ன ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) & (இ) மருத்துவம், பொதுச் சுகாதாரத் துறைகளை ஒன்றாக இணைத்து சுகாதாரம் குடும்ப நலத்துறை ஒன்றைத் தனியாக அமைக்க வேண்டும் என்று அரசின் முடிவினையொட்டி, சுகாதாரம் குடும்ப நலத்துறை இயக்குனர், கூடுதல் இயக்குநர் பதவிகள் ஏற்படுத்தப் பட்டன. முன்னாள் மருத்துவத்துறை இயக்குனர், பொதுச் சுகாதாரத்துறை இயக்குனர் பதவி வகித்தவர்கள் இப்பதவி களுக்கு முறையே சுகாதாரம் குடும்பநலத்துறை இயக்குநராகவும்

[7th March 1969

கூடுதல் இயக்குநராகவும் நியமிக்கப்பட்டார்கள். இதனையொட்டி, மருத்துவத்துறை இயக்குநர், பொது சுகாதார இயக்குநர் பதவிகள் இயக்கம் நீக்கி இருக்குமாறு ஆணையிடப்பட்டது.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, நமது ராஜ்யத்தில் Director of Medical Services, Director of Public and Director of Medical Education என்று மூன்று பதவிகள் இருக்கின்றன. அதில் Director of Public Health என்பதை நீக்கி அடிஷனல் டைரக்டராக ஆக்கியிருக்கிறார்கள். Director of Medical Services- ஐ ஏன அடிஷனலாக ஆக்கக் கூடாது? இதை மட்டும் செய்வதற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : ஹை பவர் கமிட்டி என்ற குழு பொருளாதார நிர்வாக சீரமைப்பின் காரணமாக இப்படிப்பட்ட புதிய மாற்றத்தைச் சிபாரிசு செய்தது. அதன் காரணமாக Director of Medical Education என்று ஒரு இயக்குனரை நியமித்து அவரது தலைமையின்கீழ், மருத்துவக் கல்வியை மாத்திரம் தனியாகப் பிரித்து மெடிகல் எஜுகேஷன் டிரெயினிங் அண்ட் ரிசர்ச் அட்மினிஸ்ட்ரேஷன் ஃபார் டீச்சிங் இன்ஸ்டியுஷன் என்றெல்லாம் கல்வி தருகிற இந்த நிலையங்களை எல்லாம் அவரது மேற்பார்வையில் வைத்து Director of Medical Education என்று தனியாக தனி இயக்குனராகவும், இதைப்போன்று Director of Health Services தனியாக குடும்பக் கட்டுப்பாடும், சுகாதாரமும் ஒன்றாக இணைத்து மாநிலம் பூராவுமுள்ள மருத்துவம், சுகாதார பணிகளுக்கு ஒரு இயக்குனரும் அதற்கு கூடுதலாக ஒரு இயக்குனராக ஒருவரையும் ஏற்படுத்தியிருக்கிறோம். கல்வியையும் நிர்வாகத்தையும் தனித் தனியாகப் பிரித்து, இந்த அமைப்புகளை ஏற்பாடு செய்தார்கள். அதன் விளைவாக பொதுச் சுகாதார இயக்குனராக ஒருவரை இன்றைக்குக் கூடுதல் இயக்குனராக அமைத்திருக்கிறார்கள். தனியாகக் கல்விக்கென்று இயக்குநர் பிரிக்கப்பட்டிருக்கிறார்.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, நான் கேட்பது, Director of Medical Services and Director of Public Health என்ற இரண்டு பதவிகளும் சமமான அந்தஸ்து உள்ளவை. ஒருவரை மட்டும் தன்னுடைய அந்தஸ்திலிருந்து குறைத்து அடிஷனலாக ஆக்கியதற்குக் காரணம் என்ன? தனி அந்தஸ்துடன் வேலை பார்த்து வந்த ஒருவரை திடீரென்று அடிஷனலாக ஆக்கியது சரியா? Director of Medical Services -ஐ பப்ளிக் ஹெல்த் டைரக்டரின்கீழ் அடிஷனலாக ஏன் ஆக்கியிருக்கக் கூடாது?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இந்த இருவருக்கும் சீனியாரிட்டி என்று வரும்போது இப்போதிருக்கிற செல்வி மரைக்காயர் அவர்கள்தான் சீனியராக கருதப்படுகிறார்கள்.

7th March 1969]

அதனால் அவரை இயக்குனராகவும் செல்வி ஷர்மா அவர்களை கூடுதல் இயக்குனராகவும் வைத்திருக்கிறார்கள்.

திரு. வி. தங்கபாண்டியன் : டைரக்டர் ஆஃப் ஹெல்த் சர்வீஸஸ் நியமிக்க வேண்டுமென்று எப்போது முடிவு செய்யப்பட்டது? அதற்கான உத்தரவு எப்போது போடப்பட்டது?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : 1966-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் உத்தரவு போடப்பட்டது. 1—7- -1966-க்குள் இதை ஊர்ஜிதம் செய்யவேண்டுமென்று அந்த உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. அந்த இருவரும் முறையே Additional Director of Public Health ஆக 23—2—1968லும், Director of Health Services and Family Planning ஆக 29—2—1968-லும் பதவி ஏற்றார்கள்.

Appointment of Tamil Pandits as Headmasters

*150 Q.—THIRU M. SANKARALINGAM PILLAI (on behalf of Thiru D. Santosham). Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether under the present rules, First Grade Tamil Pandits without University Degree are eligible for appointment as Headmasters; and

(*b*) if not, the reasons therefor?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: (on behalf of the Hon. the Minister for Education and Industries). (*a*) No .

(*b*) According to the existing orders, the claims of Grade I Pandits can be considered for inclusion of their names in the Panel of Headmasters of former Board High Schools, provided they possess a degree in a language or a subject under degree in teaching and five years teaching experience after obtaining the B.T. degree in recognised Secondary Schools.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : தலைவர் அவர்களே, தமிழ் ஆட்சி மொழியாக ஆக்கப்பட்ட பிறகு, தமிழ் ஆசிரியர்கள் ஆங்கிலப் பட்டம் பெற்ற பிறகுதான் தலைமை ஆசிரியர்களுடைய பேனலில் வரலாம் என்று சொல்லப்படுகிறது. அதை நீக்கி தமிழ் ஆசிரியர்களில் முதுமைப் பணி உடையவர்களைத் தலைமை ஆசிரியர்கள் பேனலில் கொண்டுவர உத்தரவு பிறப்பிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : அதைப்பற்றி அரசு பரிசீலித்து வருகிறது The question of integration of the services of the staff is under the consideration of the Government and the Director considers that there is no need to consider this question at this stage.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, தமிழை அரியாசனத்தில் ஏற்றி வைத்திருக்கிறோம் என்று கூறிக்கொண்டிருக்கும் திராவிட முன்னேற்றக் கழக அரசு தமிழைப் பயின்ற